முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்

ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1500

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.11.2023**, செவ்வாய்கிழமை

1. ஓங்்கார ஞான சொரூபமே
ஓங்்கார பரபிரம்மமே
ஓங்்காரக்குடில் படைத்து அருளும்
ஓங்்காரனே எந்தன் அவதாரமே
2. அவதார ஞானியே அரங்கனே
ஆற்றல்பட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அவனியில் ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சோபகிருது துலைத்திங்கள்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 21 ம் நாள், 07.11.2023, செவ்வாய்கிழமை)
3. திங்களிலே அரங்கன் கேட்கும் வண்ணம்
தெரிவிப்பேன் நித்தம்நித்தம் ஆறுமுகன் யான்
ஓங்்கார சூட்சும பலம் கூட்டி
உடனிருந்து அற்புதம் நடத்திவர
4. வருகவே அரங்கனைக் கண்டால் போதும்
வருவோர்க்கு ஞான சித்தி உறுதியாகும்
தருகின்ற அரங்கன் தர்மத்தில்
தக்கபடி பொருளுதவி செய்து வந்தால் போதும்
5. வந்தவர்க்கெல்லாம் ஞான சித்தி
வடிவேலன் என்னால் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் ஞானவழியை
நிலவுலகில் நீதிவழியாக ஏற்று
6. வருங்காலம் மக்கள் தொடர்ந்து பின்பற்றி வந்தால்
வையகத்தில் தர்மஞான ஆட்சிமலரும்
மலரவே அற்புதத்தை நடத்த
மகான் சுப்ரமணியர் யானும்

7. வளர்க்கின்றேன் அரங்கன் தர்மத்தை
வையகமெங்கும் அரங்கன் தொண்டர்களையும் பெருக்கி
வையகம் மலர ஞானபலம் பெற
வழிகாட்டி ஆறுமுகன் யான் துணைபுரிகின்றேன்
8. ஆகவே அரங்கன் பேரிலான அனைத்து கிளைகளும்
ஆறுமுகன் என் ஆசிபெற்ற கிளைகளாகும்
அச்சமற என் நாமஜெபம் சொல்லி அறம் வளர்த்தால் போதும்
அங்கெல்லாம் ஆறுமுகன் யான் இறங்கி அற்புதம் நடத்துவேன்
9. நடத்தவே வருங்காலம் ஞான ஆட்சிக்காலமாக இருக்க
ஞானிகள் பூஜையும் ஞானதேசிகன் சொன்ன தர்மமும்
ஞாலமெங்கும் பரவி வந்தால் போதும்
ஞானிகளுடைய ஆட்சி ஞான ஆட்சி சடுதி மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—